சென்னை, கிண்டி, கிங் நோய் தடுப்பு மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் 230 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தரைத்தளம் மற்றும் ஆறு மேல் தளங்களுடன் மொத்தம் 6 இலட்சம் சதுர அடி பரப்பளவில் உலக தரத்தில் அதிநவீன வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள 1000 படுக்கை வசதிகளுடன் கூடிய கலைஞர் நூற்றாண்டு பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனை திறக்கப்படவுள்ள நிலையில் நேற்று முன்தினம் (8.6.2023) தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பார்வையிட்டார். பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்ரமணியன், துணை மேயர் மு.மகேஷ் குமார், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, பொதுப்பணித் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி. சந்தர மோகன், மற்றும் பொதுப்பணித்துறை உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

சென்னை, கிண்டி, கிங் நோய் தடுப்பு மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் 230 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தரைத்தளம் மற்றும் ஆறு மேல் தளங்களுடன் மொத்தம் 6 இலட்சம் சதுர அடி பரப்பளவில் உலக தரத்தில் அதிநவீன வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள 1000 படுக்கை வசதிகளுடன் கூடிய கலைஞர் நூற்றாண்டு பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனை திறக்கப்படவுள்ள நிலையில் நேற்று முன்தினம் (8.6.2023) தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பார்வையிட்டார். பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், துணை மேயர் மு.மகேஷ் குமார், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, பொதுப்பணித் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி. சந்தர மோகன், மற்றும் பொதுப்பணித்துறை உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் நேற்று முன்தினம் (08.06.2023) முகாம் அலுவலகத்தில் பொன் கெமிக்கல்ஸ் நிறுவனம் சார்பில் தமிழ்நாடு சாம்பியன் அறக்கட்டளைக்கு 25 லட்சம் ரூபாய்க்கான காசோலை வழங்கப்பட்டது.. உடன் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் மேகநாத ரெட்டி, மற்றும் மற்றும் பொன் கெமிக்கல்ஸ் நிரவாகிகள் உள்ளனர்.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் நேற்று முன்தினம் (08.06.2023) "தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளைக்கு இராம்கோ நிறுவனம் சார்பில் ரூபாய் 4 கோடிக்கான காசோலை வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி மற்றும் இராம்கோ நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவியை திரும்பப் பெறுக!

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தல்!

சென்னை, ஜூன் 10 - மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு கூட்டம் 2023 ஜூன் 6, 7 ஆகிய தேதிகளில் சென்னையில் மத்தியக்குழு உறுப்பினர் பெ.சண்முகம் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் அரசியல் தலைமைக்குழு உறுப்பினர்கள் பிரகாஷ் காரத், ஜி.ராமகிருஷ்ணன், மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன், மத்தியக்குழு உறுப்பினர்கள் பி. சம்பத், உ. வாசுகி மற்றும் மாநில செயற்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் வருமாறு:-

தமிழ்நாடு ஆளுநர் ஆர். என்.ரவி தொடர்ந்து ஆளுநருக்குரிய அதிகார வரம்புகளை மீறி செயல்படுவதை வழக்கமாக கொண்டுள்ளார். மாநில அமைச்சரவையின் ஆலோசனைகளை ஏற்றுத்தான் ஆளுநர் செயல்பட முடியும் என்று உச்சநீதிமன்றம் தெளிவுபடுத்திய பிறகும் அவர் தனது போக்கை மாற்றிக் கொள்ளவில்லை.

தமிழ்நாடு அரசின் ஒப்புதல் இல்லாமலேயே சமீபத்தில் பல்கலைக்கழக துணை வேந்தர்கள் மாநாட்டை, வேந்தர் என்ற முறையில், ஆளுநர் நடத்தியுள்ளார். மாநில பல்கலைக்கழகங்களின் துணை வேந்தர்களும் அழைக்கப்பட்டுள்ளனர். ஆனால், தமிழ்நாடு அரசின் சார்பில் பங்கேற்க வேண்டிய உயர்கல்வித் துறை அமைச்சர் அழைக்கப்படவில்லை. இம்மாநாட்டில் பேசிய ஆளுநர், தமிழக முதலமைச்சர் அண்மையில் வெளிநாடுகளுக்குச் சென்று வந்தார். நாம் கேட்பதாலோ, அவர்களுடன் பேசுவதாலோ முதலீட்டாளர்கள் வரமாட்டார்கள் என்றும், அதற்கான கட்டுமான வசதிகள் தமிழ்நாட்டில் இல்லை எனவும் பேசியுள்ளார். ஆளுநரின் இந்த பேச்சு உண்மைக்கு புறம்பானது மட்டுமல்ல, தமிழ் நாட்டிற்கே விரோதமானதாகும். தமிழ்நாட்டில் மூலதனமிட தயாராக உள்ள வெளிநாட்டு முதலீட்டாளர்களை தடுக்கும் வகையில் ஆளுநரின் பேச்சு அமைந்துள்ளது. மேலும், அனைவருக்கும் கல்வி என்கிற கோட்பாட்டைப் பின்னுக்குத் தள்ளுகிற ஒன்றிய அரசின் தேசியக் கல்விக் கொள்கை அவசியமானது எனவும் ஆளுநர் பேசியுள்ளார்.

மேலும், மற்றொரு கூட்டத்தில் மொழிவழி மாநில கருத்தாக்கத்தை விமர்சித்துள்ளார். ஒரு மாநிலத்திற்கென்று தனி பண்பாடு, கலாச்சாரம் இல்லை, தமிழர், தெலுங்கர் என்பது கற்பனையான அடையாளம் என்று பேசியதன் மூலம் தேசிய இன அடையாளத்தையே நிராகரித்துள்ளார். மாநிலங்களின் ஒன்றியமே பாரதம் என்ற அரசியல் சாசனத்திற்கு மாறாக, இந்த அடையாளங்கள் தேசத்தை பலவீனப்படுத்துவதாக குறிப்பிட்டுள்ளார். அரசியல் சாசன அடிப்படையில் உருவாக்கப்பட்ட பதவியில் இருந்து கொண்டு அதற்கு புறம்பாகவே பேசுவது முற்றிலும் அநியாயமானது. ஆளுநரின் இத்தகைய கருத்துக்களுக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயற்குழு வன்மையான கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறது. அரசியல் சாசனத்திற்கு விரோதமாகவும், ஆர்.எஸ்.எஸ்.சின் அரசியல் கருவியாகவும் செயல்பட்டு வரும் தமிழ்நாடு ஆளுநரை ஒன்றிய அரசு திரும்பப் பெற வேண்டுமெனவும், இவரை ஆளுநர் பொறுப்பிலிருந்து பதவி நீக்கம் செய்வதற்கான உரிய நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு மேற்கொள்ள வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாநில செயற்குழு வலியுறுத்துகிறது.

ஜெர்மனியின் கொலொனில் ஜெர்மன் விளையாட்டு பல்கலைக் கழகத்தில் 30.07.2023 முதல் 05.08.2023 வரை நடைபெற உள்ள 8வது உலக அளவிலான குள்ள மனிதர்களுக்கான விளையாட்டு போட்டியில் கலந்து கொள்ள உள்ள 3 தமிழ்நாட்டு வீரர்களுக்கு நுழைவுக் கட்டணம், விமானக் கட்டணம், உள்ளூர் போக்குவரத்துக் கட்டணம், விசா செலவுகள் மற்றும் சீருடை உள்ளிட்ட செலவினங்களுக்காக தலா ரூ.2,49,200/ மொத்த தொகை என ரூ.7,47,600/ க்கான காசோலையினை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேற்று முன்தினம் (8.6.2023) பசுமை வழிச்சாலையில் உள்ள முகாம் அலுவலகத்தில் வழங்கினார். உடன் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, உள்ளனர்.

இராம்கோ நிறுவனம் ரூ.4 கோடி; பொன் கெமிக்கல்ஸ் ரூ.25 லட்சம்!

தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளைக்கு நிதி!

அமைச்சர் உதயநிதி ஸ்டாலினிடம் வழங்கப்பட்டது!

சென்னை, ஜூன் 10 - இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் நேற்று முன்தினம் (08.06.2023) தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளைக்கு இராம்கோ நிறுவனம் சார்பில் ரூபாய் 4 கோடி மற்றும் பொன் கெமிக்கல்ஸ் நிறுவனம் சார்பில் ரூபாய் 25 இலட்சத்திற்கான காசோலை வழங்கப்பட்டது.

தமிழ்நாட்டில் விளையாட்டுக்கான கட்டமைப்பை மேம்படுத்தி சர்வதேச அளவிலான விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளை உருவாக்கும் வகையிலும், தேவையான உதவிகளை வழங்கிடும் வகையிலும், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களால் "தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை" (Tamil Nadu Champions Foundation) உருவாக்கப்பட்டுள்ளது.

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் அடிப்படையில் அரசு ஆணை எண்.29 இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை நாள் 05.05.2023-ன் படி இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்களை தலைவராகவும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களை துணைத்தலைவராகவும் கொண்ட ஏழு பேர் அடங்கிய நிர்வாகக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து பல்வேறு அமைப்புகள் மற்றும் நிறுவனங்கள் சார்பில் இந்த அறக்கட்டளைக்கு நிதியுதவிகள் வழங்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் நேற்று (08.06.2023) சென்னை பசுமை வழிச்சாலையில் உள்ள முகாம் அலுவலகத்தில் "தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளைக்கு இராம்கோ நிறுவனம் சார்பில் பங்களிப்பாக ரூபாய் 4 கோடிக்கான காசோலை வழங்கப்பட்டது.

மேலும் பொன் கெமிக்கல்ஸ் நிறுவனம் (Pon Pure Chemicals Group) சார்பில் ரூபாய் 25 இலட்சத்திற்கான காசோலை அமைச்சர் அவர்களிடம் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, இராம்கோ மற்றும் பொன் கெமிக்கல்ஸ் நிறுவனங்களின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

திருநெல்வேலி மாவட்டம், கொக்கிரக்குளம் பகுதியில், புதுப்பிக்கப்பட்ட தமிழ்நாடு ஹோட்டல் தங்கும் விடுதி, அமுதகம் உணவகத்தை தமிழ்நாடு சட்டமன்ற பேரவைத் தலைவர் மு.அப்பாவு தலைமையில் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன், சுற்றுலாத்துறை இயக்குநர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் சந்தீப் நந்தூரி, , மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் கா.ப.கார்த்திகேயன், பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வகாப், திருநெல்வேலி மாநகராட்சி மேயர் பி.எம்.சரவணன் ஆகியோர் முன்னிலையில் குத்துவிளக்கேற்றி திறந்து வைத்தார்கள். உடன் முன்னாள் சட்டப்பேரவைத் தலைவர் இரா.ஆவுடையப்பன், முன்னாள் அமைச்சர் டி.பி.எம். மைதீன்கான், மாநகராட்சி துணை மேயர் கே.ஆர்.ராஜு, மாவட்ட ஊராட்சித் தலைவர் வி.எஸ். ஆர்.ஜெகதீஷ் மற்றும் அரசு அலுவலர்கள், முக்கிய பிரமுகர்கள் ஆகியோர் உள்ளார்கள்.

பெண்ணுரிமைக் காவலர் கலைஞர்!

தன் 18 வயதில் பெண்களின் உயர்விற்கு உரிமைக்கு குரல் கொடுத்தவர் கலைஞர்.

அறிஞர் அண்ணாவின் திராவிட நாடு 8 ஆவது இதழில்(26.02.1942)

" இளமை பலி " கட்டுரை வயோதிகக் கணவனை மணந்து அக்கிழவனையும் பறிகொடுத்து, விதவையான இளமங்கையின் சோக நிலையினை சித்தரிப்பதே 'இளமைப் பலி' கட்டுரையாகும்.

மனைவியை இழந்த கணவன் மறுமணம் செய்யும்போது, கணவனை இழந்த மனைவி, மறுமணம் ஏன் செய்யக்கூடாது? என்று பெண்ணுக்காக உரிமைக் குரல் கொடுக்கிறார் கலைஞர் .....

மறுமணம் தான் உண்டா ?
மங்கை நல்லாள் இன்பமுற !
சீ என்று இகழப் பட்டாளே அச்சீரிள நங்கை !

அந்தோ ! நாட்டினரே !
இன்னுமா உறங்குகின்றீர் ?
பெண்களின் ஓலத்தை கேட்டிலீரோ ?

" கைம்மை' கொடுமை கண்டு கலங்கிலீரோ?
விதவைப் பட்டத்தை விரும்பி அளிக்கின்றீரே!
மனைவி இறந்தால் மறுதாரம் மணம்புரியும்
நீங்கள் மாங்கையரின்
மறுமணத்தை வெறுப்பது நன்றா ?

ஏ தமிழா ! பகுத்தறிவு எங்கேபோய்
பதுங்கிக் கொண்டது?
பெண்குலத்தின் கதியை
நீ ஏன் கண்டு கொள்ள வில்லை ?
எத்தனை நாளைக்கு நீ
அடிமையாக வாழப் போகிறாய் ?
இன்னும் எத்தனை நாளைக்கு
சுயமரியாதை யற்று வாழப் போகிறாய் ?
எத்தனை நாளைக்கு
மூட வைதீகத்தில் உழலப் போகிறாய் ?

ஐவருக்கும் தேவி அழியாப் பத்தினி என்றால்
ஆம் என்று தலை அசைக்கிறாய்.
அது எப்படி என்று கேட்கும்
பகுத்தறிவாதியை நாத்திகன் என்கிறாய்!
ஏ வீரப் புதல்வா!
நிமிர்ந்து பார் மேனாடுகளை !
அங்கு தழைத்தோங்கி நிற்கிறது
பெண்களின் உரிமை !
அதனால் அடைகின்றன மேன்மை !

ஆகவே செந்தமிழ்ச் செல்வா !
மங்கையர்தாம் நம் நாட்டின்
பொக்கிஷம் என்பதை மறவாதே !
அவர்கள் வாழ்வைக் கெடுக்காதே !
மறுமணத்தை மறுத்து அவர்கள்
இளமையை பலியிடாதே !

...பெண்ணுரிமைக் காவலர் கலைஞர்..

(அன்றைய பெண் சமுதாயம் சுமார் எண்பது ஆண்டுகட்கு முன் இருந்த அவலநிலையை எடுத்துக் காட்டும் இக்கட்டுரை இன்றைய இளைய சமுதாயம் அறிந்து கொள்ள பெருந்துணை புரியும்)

கேவிஆர்